# கண்ணுக்குத் தெரியாது!

வாசிக்க: மத்தேயு 23:16-28

***"கொசுவை வடிகட்டி ஒட்டகத்தை விழுங்குகிறீர்களே!" (மத் 23:24)***

வெளிப்படையான காரியங்களை வற்புறுத்தி, ஆனால் முக்கியமானவற்றைக் கவனியாதுவிடும் மாய்மால மார்க்கத்தை இயேசு கண்டனம் செய்கையில் தமது இறுதிப் பிரசங்கத்தில் இப்பழமொழியைக் கூறினார். பூச்சிகளில் சிறியது அநேகமாய்க் கொசுதான். பாலஸ்தீன நாட்டிலிருந்த தரை மிருகங்களில் ஒட்டகம்தான் பெரியது; அது சடங்கின்படி அசுத்தமானது.

மத்தேயு 23ஆம் அத்தியாயம் முழுவதிலும் இயேசு கடுங்கோபத்துடன் காட்சியளிக்கிறார். குறைந்தது எட்டு தடவை "ஐயோ!" எனச் சாபமிட்டார். மார்க்கத் தலைவர்களை "வெளிவேடக்காரர், குருட்டு வழிகாட்டிகள், மடையர்" என்றெல்லாம் அழைத்தார். கிறிஸ்துவின் காலத்திலிருந்த யூத மதத்திற்கும் இன்றையக் கிறிஸ்தவத்திற்கும் வேறுபாடு அதிகமில்லை. எப்படியெனில், நமது தலைவர்கள் செய்வதையல்ல, சொல்வதைத்தான் நாம் பின்பற்ற முடியும் (மத் 23:3); தலைவர்கள் மற்றவர்கள் மீது கடினமாகவும் தங்கள்மீதோ மிருதுவாகவும் இருக்கிறார்கள் (வச 4); மதிப்பிற்காக வேறுவித உடைகளை உடுத்திக்கொள்கிறார்கள் (வச 5); பட்டங்களையும் பதவிகளையும் நாடியலைகிறார்கள் (வச 6-12); தலைவர்கள் கடவுளின் காரியங்களில் வளருவது நின்றுபோகும்போது, அவர்கள் மக்களது வளர்ச்சிக்கும் முட்டுக்கட்டையாயிருக்கிறார்கள் (வச 13); பிரசங்கிமார் தங்களது ஜெபங்களை வைத்து விதவைகளையும் பாடுபடுகிறவர்களையும் கொள்ளையடிக்கிறார்கள் (வச 14); சபை மேய்ப்பர்கள் சபையினரின் ஆன்மீக ஆரோக்கியத்தைவிட அவர்களது எண்ணிக்கை பெருகுவதிலேயே கண்ணும் கருத்துமாயிருக்கிறார்கள் (வச 15); சடங்குகளே சத்தியத்தைவிட முக்கியத்துவம் பெறுகின்றன (வச 16-22); தசமபாகம் செலுத்தாத விசுவாசிகள்மீது மேய்ப்பர்களுக்குக் கோபம் வரும்; ஆனால் அவர்களைச் சமூகநலச் சேவைகளுக்கும் ஏழைகளுக்கு உதவவும் ஊக்குவிக்கமாட்டார்கள் (வச 23).

இன்று நமது ஆலயங்களில் பிரசங்கிக்க இயேசு வருவாரெனில், அவர் என்ன சொல்லுவாரென்று இதோ கற்பனைசெய்து பார்க்கிறேன்: "வேடக்காரரே, உங்களுக்கு ஐயோ! ஆலயத்திற்குள் வீடியோ எடுத்துவிட்டால் அது பரிசுத்தக் குலைச்சலாகிவிடும் என்று எண்ணுகிறீர்கள்; ஆனால் உங்கள் கமிட்டி கூடுகைகளுக்குப் போலீஸ் பந்தோபஸ்து தேவைப்படுகிறது!... வேடக்காரரே, உங்களுக்கு ஐயோ! நகை அணியக் கூடாதென்று பிரசங்கிக்கிறீர்கள்; ஆனால் மூன்று தலைமுறைகளுக்கு வங்கிகளில் பணம் சேர்த்துவைக்கிறீர்கள்!..."

"தொடாதே, சுவைக்காதே, தீண்டாதே" என்றே சொல்லிக்கொண்டிருக்கும் மார்க்கம் புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவமே அல்ல (கொலோ 2:20,21). நாமோ இந்தப் புதிய உடன்பாட்டின் காலத்திலும் பழைய ஏற்பாட்டு வாழ்க்கைதான் வாழுகிறோம். ஒட்டகம் போன்ற பெரிய மிருகத்தைக்கூடப் பார்க்கமுடியாத அளவு சட்டதிட்டக் கொள்கை நமது கண்களைக் குருடாக்கிவிட்டது! கொசு போன்ற சிறிய காரியங்களில்கூட நாம் அவ்வளவு கண்டிப்பாயிருக்கிறோமென்ற சுய வஞ்சகத்தில் அகப்பட்டிருக்கிறோம்!

*இன்னும் தூய்மை, இன்னும் பலம் மேற்கொள்ள;*
*இன்னும் விலகல் உலகக் கறையினின்று;*
*இன்னும் நாட்டம் மேலுலகின்மீது இறையரசு தேடி;*
*இன்னும் இரட்சகா உம்மைப்போல் மாற!*
*—Philip P. Bliss, 1838-1876, D.L. மூடியின் உடன் ஊழியர்*